
**செப்டம்பர் – 19**

# TNPSC துளிகள்

- திருவள்ளூர் மாவட்டத்தில் காவேரிராஜபுரம், திருநெல்வேலி மாவட்டத்தில் முத்தூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் கடம்பாடி மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் கொருக்கை ஆகிய இடங்களில் தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தினால் (SIDCO) நிறுவப் பட்ட நான்கு தொழில்துறைப் பகுதிகளைத் தமிழக முதல்வர் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
- தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகியவை ஜிஜு தீவுக்கு அருகிலுள்ள சர்வதேச கடல் பரப்பில் “Freedom Edge” எனும் ஐந்து நாட்கள் அளவிலான முத்தரப்பு இராணுவப் பயிற்சியினை நடத்துகின்றன.
- 16வது ஒருங்கிணைந்த படைத் தளபதிகள் மாநாடானது கொல்கத்தாவில் உள்ள கிழக்குப் படைப் பிரிவின் தலைமையகத்தில் நடைபெற்றது.
  - இந்த நிகழ்வின் கருத்துரு, "Year of Reforms – Transforming for the Future" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## முஸ்லிம் மாணவர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்





- தமிழ்நாடு முதல்வர் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று உதவித் தொகை திட்டத்தைத் தொடங்கினார்.
- இது ஆண்டுதோறும் 2,000 முஸ்லிம் மாணவர்களுக்கு அவர்களின் உயர்கல்வியைத் தொடர உதவும் வகையில் பயனளிக்கும்.
- இளங்கலை மற்றும் முதுகலை கல்விக்காக தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மூலம் ஒவ்வொரு பயனாளிக்கும் 10,000 ரூபாய் நிதி வழங்கப்படும்.

## இருவாட்சி பறவை வளங்காப்பு மையம்

- தமிழ்நாடு வனத்துறையானது, இந்தியாவின் முதல் இருவாட்சி வளங்காப்பிற்கான சிறப்பு மையத்தை நிறுவுவதற்காக வால்பாறை பீடபூமியில் உள்ள அட்டகட்டி பகுதியைத் தேர்வு செய்தது.
- இந்த மையமானது, ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குள் (ATR) பொள்ளாச்சி-வால்பாறை சாலைக்கு அருகில் உள்ள வனத்துறை வளாகத்தில் அமைக்கப்படும்.
- அருகி வரும் உயிரினங்கள் வளங்காப்பு மூலதன நிதியின் கீழ் இந்த திட்டத்திற்காக 1

கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- இந்த மையமானது, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் மலை இருவாட்சி, மலபார் சாம்பல் இருவாட்சி, மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி மற்றும் இந்திய சாம்பல் இருவாட்சி ஆகிய நான்கு இருவாட்சி இனங்கள் மீது கவனம் செலுத்தும்.
- இந்த மையம் IUCN மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயல்படும்.




## பெருநகரங்களில் காற்றுப் பதனிகளின் பயன்பாடு




- ஏழு பெருநகரங்களில், சராசரியாக ஒரு நாளைக்கு 4.4 மணிநேரம் என்ற பதிவுடன் சென்னையில் அதிகபட்ச காற்றுப் பதனி (ஏர் கண்டிஷனர்) பயன்பாடு பதிவாகி உள்ளது.
- சென்னையில் சுமார் 23% வீடுகளில் இரண்டுக்கும் மேற்பட்ட காற்றுப் பதனிகள் உள்ளன என்ற நிலையில் இது தேசிய சராசரியை விட சுமார் இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.
- சென்னையில் அதிக குளிர் பதனூட்டி நிரப்பு விகிதம் உள்ளது என்பதோடு 41% என்ற தேசிய சராசரிக்கும் மேலாக, 50 சதவீதத்திற்கும் அதிகமான காற்றுப் பதனி அலகுகள் ஆண்டுதோறும் மீண்டும் நிரப்பப்படுகின்றன.

- ஒவ்வொரு மறு நிரப்பலுக்கும் சென்னையில் சராசரியாக 2,300 ரூபாய் செலவாகிறது என்ற நிலையில் இது நாட்டிலேயே அதிகபட்சமாகும்.
- மிகவும் பொதுவான குளிர்பதனப் பொருளான HFC-32 (ஹைட்ரோ ஃப்ளூரோ கார்பன்-32), கார்பன் டை ஆக்சை டை விட 675 மடங்கு அதிக புவி வெப்பமடைதல் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் குளிர்பதனூட்டி பொருட்களின் கசிவு 52 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வுகளுக்குப் பங்களித்தது.

# தேசியச் செய்திகள்

## பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த தேசிய மாநாடு




- பெண்கள் அதிகாரமளித்தல் குறித்த பாராளுமன்ற மற்றும் சட்டமன்றக் குழுக்களின் இரண்டு நாட்கள் அளவிலான தேசிய மாநாடு திருப்பதியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வானது, 'திருப்பதி தீர்மானத்தை' ஏற்றுக் கொண்டது.
- இந்தத் தீர்மானமானது, பெண்களுக்கு அதிகாரமளிப்பதை முன்னேற்றுதல் அனைத்துப் பாலினத்திற்கும் பயனளிக்கும் நிதி ஒதுக்கீட்டில் கவனம் செலுத்துதல், அனைத்து மட்டங்களிலும் பெண்களின் தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் துறைகளிலும் பாலினப் பாகுபாடு கண்டறிதல் பகுப்பாய்வினைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான ஒரு செயல் திட்டத்தினைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- முன்னேற்றம் இருந்த போதிலும், மக்களவை உறுப்பினர்களில் பெண்கள் 14% ஆக மட்டுமே உள்ளனர் என்பதோடு இது உலகளாவியச் சராசரியான 26.5 சதவீதத்தினை விடக் குறைவாகும்.
- இந்தியா "ஜனநாயகத்தின் தாய்" என்று கொண்டாடப் படுகிறது.


## தேசிய வேளாண் மாநாடு - ராபி அபியான் 2025

- இரண்டு நாட்கள் அளவிலான 2025 ஆம் ஆண்டு தேசிய வேளாண் மாநாடு-ராபி அபியான் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வானது, 2025-26 ஆம் ஆண்டு ராபி பயிர் பருவத்திற்கான உத்திகளைத் திட்டமிடுவதற்காக நடத்தப்படும் விக்சித் கிருஷி சங்கல்ப் அபியான் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது, நீடித்த நிலையான வேளாண்மையினை ஊக்குவிப்பது மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகியவற்றை இந்த மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உச்ச நீதிமன்றத்தின் நிலுவையில் உள்ள வழக்குகள்




- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப் படி, இந்திய உச்ச நீதிமன்றத்தில் இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விட அதிகபட்சமாக மொத்தம் 88,417 வழக்குகள் நிலுவையில் உள்ளன.
- நீதிமன்றம் அதன் முழு அங்கீகரிக்கப்பட்ட நீதித்துறை எண்ணிக்கையான 34 நீதிபதிகளுடன் செயல்படுகிறது.
- தேசிய நீதித்துறை தரவுக் கட்டமைப்பானது 69,553 உரிமையியல் வழக்குகள் மற்றும் 18,864 குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருப்பதைக் காட்டுகிறது.

- ஆகஸ்ட் மாதத்தில், 7,080 புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன அதே நேரத்தில் 5,667 வழக்குகள் மட்டுமே தீர்க்கப்பட்டன என்பதோடு இது 80.04% வழக்குத் தீர்வு வீதத்தினைக் குறிக்கிறது.
- நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைப்பதற்காக, மே முதல் ஜூலை வரையிலான கோடை விடுமுறையின் போது 21 அமர்வுகளை நடத்தும்படி இந்தியத் தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டில் மூன்று தலைமை நீதிபதிகள் இவ்வாறு முயற்சித்த போதிலும், நீதிமன்றத்தில் காலியிடங்கள் சுழியமாக இருந்த போதிலும், நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

## குற்றவியல் வழக்குகளில் டிஎன்ஏ சான்றுகள் குறித்த வழிகாட்டுதல்கள்




- கட்டவெள்ளை @ தேவகர் மற்றும் தமிழ்நாடு அரசு இடையிலான வழக்கில், குற்றவியல் விசாரணைகளில் டிஎன்ஏ மாதிரிகளை முறையாகக் கையாளுவதை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வெளியிட்டது.
- பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் காவலில் வைத்திருப்பது தொடர்பான நடவடிக்கைகளில் தாமதங்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிந்ததையடுத்து, மாதிரிகள் சேதப்படுத்தப்படுவது குறித்த கவலைகள் எழுந்தன.
- ஆவணங்கள் மற்றும் காவல் வைப்பு நடவடிக்கைகளுக்கு தரப்படுத்தப்பட்ட படிவங்களைத் தயாரித்து வழங்க நீதிமன்றம் அனைத்து மாநிலக் காவல் துறை தலைமை இயக்குனர்களுக்கும் உத்தரவிட்டது.
- டிஎன்ஏ மாதிரி சேகரிப்பில் முறையான பேக்கேஜிங், முதல் தகவல் அறிக்கை விவரங்கள், அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள், காவல்துறை மற்றும் சாட்சிகளின் கையொப்பங்கள் இருக்க வேண்டும்.
- டிஎன்ஏ மாதிரிகள் 48 மணி நேரத்திற்குள் தடயவியல் அறிவியல் ஆய்வகத்தை அடைவதை விசாரணை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் மற்றும் தாமதங்கள் குறித்து எழுத்துப் பூர்வமாக விளக்கப்பட வேண்டும்.
- விசாரணை அல்லது மேல்முறையீட்டின் போது சேமிக்கப்பட்ட மாதிரிகளை நீதிமன்ற அனுமதியின்றி திறக்கவோ அல்லது மாற்றவோ கூடாது.
- வழக்கு முடியும் வரை மாதிரிச் சேகரிப்பிலிருந்து காவல் வைப்பு நடவடிக்கை மீதான

பதிவேடுகள் ஆனது பராமரிக்கப்பட்டு, நீதிமன்றப் பதிவுகளின் ஒரு பகுதியாக அது இருக்க வேண்டும்.

- மனோஜ் மற்றும் மத்தியப் பிரதேச மாநில அரசு இடையிலான மற்றும் ராகுல் மற்றும் டெல்லி மாநில அரசு இடையிலான வழக்குகள் போன்ற முந்தைய வழக்குகளில், ஆதாரச் சேதப்படுத்துதல் அபாயங்கள் காரணமாக டிஎன்ஏ அறிக்கைகளை நீதிமன்றம் நிராகரித்தது.
- இந்திய சாட்சியச் சட்டத்தின் 45வது பிரிவின் கீழ் டிஎன்ஏ சான்றுகள் கருத்து ஆதாரமாகக் கருதப் படுகின்றன என்றும், அவை அறிவியல் மற்றும் சட்டத் தரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- டிஎன்ஏ மட்டும் கணிசமான ஆதாரம் அல்ல; அதன் ஆதார மதிப்பு என்பது சரியான சேகரிப்பு, கையாளுதல் மற்றும் நிபுணர் பகுப்பாய்வைப் பொறுத்தது.

# சர்வதேசச் செய்திகள்

## தெஹ்ரானில் முத்தரப்பு கூட்டம்




- இந்தியா, ஈரான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியவை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதியன்று ஈரானின் தெஹ்ரானில் முதல் முத்தரப்பு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை நடத்தின.
- தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.
- இதில் சபாஹர் துறைமுகம் மற்றும் சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித் தடம் (INSTC) ஆகியவற்றை அதிக அளவில் பயன்படுத்துவதன் வர்த்தகம் மற்றும் இணைப்பை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.
- கஜகஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவை இந்தியாவுடன் வர்த்தகத்தினை

அதிகரிக்கவும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை அணுகுவதற்கும் சபாஹர் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் ஆர்வம் தெரிவித்தன.

- சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கும், அருமண் தாதுக்கள் உட்பட முக்கிய பொருட்களைப் பெறுவதற்கும் யூரேசியப் பொருளாதார ஒன்றியத்துடன் இந்தியா ஓர் ஆரம்ப தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (FTA) பின்பற்றுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கிளாமிடியா தடுப்பூசி




- அருகி வரும் கோலாக் கரடிகளின் எண்ணிக்கையில் மலட்டுத்தன்மை மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் கிளமிடியா நோயிலிருந்து அவற்றைப் பாதுகாக்க ஆஸ்திரேலியா உலகின் முதல் ஒற்றை தவணைத் தடுப்பூசியை அங்கீகரித்துள்ளது.
- இந்தத் தடுப்பூசியானது இனப்பெருக்க வயது உள்ள கோலாக்களில் நோய்த் தாக்க அறிகுறிகளைக் குறைக்கிறது மற்றும் காடுகளில் கிளமிடியா பாதிப்பினால் ஏற்படும் உயிரிழப்பினைக் குறைந்தது 65% குறைக்கிறது.
- தென்கிழக்கு குயின்ஸ்லாந்து மற்றும் நியூ சவுத் வேல்ஸில் உள்ள கோலா கரடிகளின் எண்ணிக்கை 70% வரையிலான தொற்று விகிதங்களை எதிர்கொள்கிறது என்பதோடு இது உள்ளூரில் அவற்றின் அழிவை அச்சுறுத்துகிறது.
- பல ஆஸ்திரேலிய மாகாணங்களில் கோலாக்கள் அருகும் நிலையில் உள்ளன என்ற நிலையில் மேலும் எந்தவொரு நடவடிக்கையும் இல்லாமல் இருந்தால், அவற்றின் அழிவு 2050 ஆம் ஆண்டிற்குள் சாத்தியமாகி விடும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒடிசாவில் கண்கவர் யூஸ்டோமா பூக்கள்

- தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனம் (NBRI) உருவாக்கிய பசுமைக் குடிலில்

ஒடிசாவில் முதல் முறையாக கண்கவர் யூஸ்டோமா பூக்கள் பூத்துள்ளன.

- முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட யூஸ்டோமா, தற்போது உள்ளூரில் பயிரிடப் படுவதுடன், விவசாயிகள் இந்த அயல்நாட்டுத் தாவரத்தை வளர்ப்பதற்கான புதிய வாய்ப்புகளை வழங்குகிறது.
- NBRI ஆனது சம்பல்பூர் மாவட்டத்தில் வெப்பமான சூழ்நிலையில் யூஸ்டோமாவை வெற்றிகரமாக வளர்த்தது, இது ஒடிசாவின் காலநிலையில் இந்த தாவரம் செழித்து வளர முடியும் என்பதைக் காட்டுகிறது.
- மெக்சிகோ மற்றும் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட யூஸ்டோமா தாவரத்தினை ஒடிசாவில் ஆண்டிற்கு இரண்டு முறை வளர்க்கலாம்.




## மூங்கிலை அடிப்படையாகக் கொண்ட எத்தனால் ஆலை


- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று அசாமின் கோலாகாட் மாவட்டத்தில் உள்ள நுமாலிகர் சுத்திகரிப்பு நிலையத்தில் 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான மூங்கிலை அடிப்படையாகக் கொண்ட எத்தனால் ஆலையை பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த ஆலையானது எத்தனால் உற்பத்திக்கு ஏற்ற அதிக செல்லுலோஸ் உள்ளடக்கத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பால்கோ (பம்புசா பால்கூவா) மற்றும் துல்டா (பம்புசா துல்டா) வகை மூங்கிலைப் பயன்படுத்துகிறது.
- இந்த ஆலையானது ஆண்டுதோறும் 48,900 மெட்ரிக் டன் எத்தனால், அசிட்டிக் அமிலம்,

ஃபர்ஃபுரல் மற்றும் உணவு தர திரவ கார்பன் டை ஆக்சைடு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## ‘Grey Rhino’ நிகழ்வு – கேரளா




- வயநாட்டில் உள்ள முண்டக்கை-சூரல்மலை நிலச்சரிவு ‘Grey Rhino’ நிகழ்வாக அடையாளம் காணப்பட்டது.
- இதன் பொருள், தெளிவான எச்சரிக்கை அறிகுறிகள் இருந்த போதிலும் புறக்கணிக்கப் பட்ட மிகவும் சாத்தியமான பேரழிவு ஆகும்.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் விரிவான மனித தலையீடு மற்றும் சுற்றுச்சூழல் தரமிழப்பு கொண்ட நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது.
- இந்த அறிக்கையானது, கடுமையான சுற்றுச்சூழல் விதிமுறைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த மேம்பாடு மற்றும் எதிர்கால நிலச்சரிவுகளைத் தடுப்பதற்காக உள்ளூர் சமூகங்களின் தீவிர ஈடுபாட்டைக் கோருகிறது.
- நீண்டகால நடவடிக்கைகளில் 2045-50 ஆம் ஆண்டுகளுக்குள் முழுமையான கரிம

நீக்கத்திற்கான கேரளாவின் உறுதிப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த முந்தைய நிபுணர் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

## வனவிலங்கு மற்றும் வனத் திருத்த மசோதாக்கள், 2025




- ❖ கேரள அமைச்சரவையானது 2025 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்பு (திருத்தம்) மசோதா வரைவை அங்கீகரித்தது.
- ❖ குடியிருப்பு பகுதிகளில் மக்களைத் தாக்கி காயப்படுத்தும் வன விலங்குகளை உடனடியாகக் கொல்ல உத்தரவிட தலைமை வனவிலங்குப் பாதுகாவலருக்கு இது அதிகாரம் அளிக்கிறது.
- ❖ வன விலங்குகளின் தாக்குதல்களின் போது பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக இந்தியாவில் எந்தவொரு மாநிலமும் மேற்கொள்ளும் முதல் சட்டத் திருத்தம் இதுவாகும்.
- ❖ தற்போதுள்ள 1972 ஆம் ஆண்டின் மத்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் காணப் படும் நேர விரயம் கொண்ட நடைமுறைகளை இது நீக்குகிறது.
- ❖ II அட்டவணையில் உள்ள வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்தால், மத்திய அரசின் அனுமதி இல்லாமல் பிறப்புக் கட்டுப்பாடு மற்றும் இடமாற்றம் ஆகியவற்றிற்கான விதிகளை வழங்குகிறது.
- ❖ எந்தவொரு அட்டவணை II வன விலங்கையும் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விலங்காக அறிவிக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது என்பதோடு இது முன்னர் மத்திய அரசால் மட்டுமே அறிவிக்கப்படக் கூடியதாக இருந்தது.
- ❖ மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விலங்காக அறிவிக்கப்பட்டவுடன், அத்தகைய விலங்குகளை யார் வேண்டுமானாலும் கொல்லலாம் என்பதோடு அவற்றின் இறைச்சியை உட்கொள்ளலாம்.
- ❖ பலமுறை கோரிக்கைகள் இருந்த போதிலும், மத்திய அரசானது காட்டுப்பன்றிகளை மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விலங்காக அறிவிக்கவில்லை; அவற்றைக் கட்டுப்படுத்த உள்ளாட்சித் தலைவர்களைக் கௌரவ வனவிலங்கு காப்பாளர்களாக மாநில அரசு நியமித்தது.
- ❖ இது போனட் மக்காக்குகளை (குல்லாய் குரங்குகளை) I ஆம் அட்டவணையிலிருந்து II ஆம் அட்டவணைக்கு மாற்ற முன்மொழிகிறது.

- வனத்துறையானது விற்பனை நிலையங்கள் மூலம் தனியார் நிலத்தில் சந்தன மரங்களை விற்பனை செய்ய அனுமதிக்கும் 2025 ஆம் ஆண்டு வரைவு கேரள வன (திருத்த) மசோதாவையும் அங்கீகரித்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 5வது அகில இந்திய ராஜ்பாஷா சம்மேளனம்

- 5வது அகில இந்திய ராஜ்பாஷா சம்மேளனம் குஜராத்தின் காந்திநகரில் உள்ள மகாத்மா மந்திரில் நடைபெற்றது.
- இந்தத் தினம் இந்தி தினத்தைக் கொண்டாடும் விதமாகவும், பிராந்திய மொழிகளுடன் சேர்த்து இந்தி மொழியை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்தியது.
- இந்தி மொழியின் அணுகலை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு சாரதி தளம் மற்றும் இந்தி ஷப்த் சிந்து கோஷ் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2029 ஆம் ஆண்டிற்குள் இந்தி ஷப்த் சிந்து கோஷ் உலகின் மிகப்பெரிய கலைக் களஞ்சியமாக மாறுவதற்கான திட்டங்கள் உள்ளன.
- அறிவியல், தொழில்நுட்பம், நீதி மற்றும் காவல் துறையில் இந்தி மொழியைப் பயன்படுத்துவதை இந்த சம்மேளனம் வலியுறுத்தியது.





# விளையாட்டுச் செய்திகள்

## உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2025

- 2025 ஆம் ஆண்டு உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் உட்பட நான்கு பதக்கங்களை வென்றது.
- ஜெய்ஸ்மின் லம்போரியா மற்றும் மினாக்சி ஹூடா முறையே மகளிர் 57 கிலோ மற்றும் 48 கிலோ எடைப் பிரிவுகளில் தங்கம் வென்றனர்.
- மகளிர் 80 கிலோவிற்கு மேலான எடைப் பிரிவில் நுபுர் ஷியோரன் வெள்ளி வென்றார்.
- மகளிர் 80 கிலோ எடைப் பிரிவில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற பூஜா ராணி வெண்கலம் வென்றார்.

- கஜகஸ்தான் ஏழு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- 2025 உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் இங்கிலாந்தின் லிவர்பூலில் உள்ள லிவர்பூல் அரங்கில் நடைபெற்றன.
- உலக குத்துச்சண்டை அமைப்பால் நடத்தப்பட்ட இது, உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்களின் முதல் பதிப்பாகும்.
- இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பிரிவுகளும் இடம் பெற்றன.




World Boxing Championships
Medal table

| | | | | | Total |
|---|---|---|---|---|---|
| 1. | KAZAKHSTAN | 7 | 1 | 2 | 10 |
| 2. | UZBEKISTAN | 6 | 2 | 3 | 11 |
| 3. | INDIA | 2 | 1 | 1 | 4 |
| 4. | BRAZIL | 1 | 3 | | 4 |
| 5. | POLAND | 1 | 2 | | 3 |
| 6. | AUSTRALIA | 1 | 1 | 1 | 3 |
| 7. | IRELAND | 1 | | 2 | 3 |
| 8. | CHINESE TAIPEI | 1 | | 1 | 2 |
| 9. | ENGLAND | | 2 | 3 | 5 |
| 10. | TURKIYE | | 2 | 1 | 3 |
| 11. | JAPAN | | 1 | 2 | 3 |
| 12. | BULGARIA | | 1 | 1 | 2 |

# முக்கிய தினங்கள்

### சர்வதேச ஜனநாயக தினம் 2025 - செப்டம்பர் 15




- இது 1997 ஆம் ஆண்டு பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தினால் (IPU) ஏற்றுக் கொள்ளப் பட்ட ஜனநாயகம் குறித்த உலகளாவிய பிரகடனத்தை நினைவு கூர்கிறது.

- இந்தப் பிரகடனமானது ஜனநாயகத்தின் அத்தியாவசியக் கொள்கைகளை குறிப்பிட்டுக் காட்டுவதோடு, முக்கிய விழுமியங்களை வலியுறுத்துகிறது மற்றும் அனைத்துத் தனிநபர்களும் பொது வாழ்வில் பங்கேற்கும் உரிமையை வலியுறுத்துகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Achieving gender equality, action by action” என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## அமிர்தசரி குல்சாவிற்கான புவி சார் குறியீடு

- பஞ்சாப் அரசானது அமிர்தசரி குல்சாவிற்கான புவி சார் குறியீடு பெறுவது குறித்து ஆராய்ந்து வருகிறது என்பதோடு மேலும் புது டெல்லியில் நடைபெறும் உலக உணவு இந்தியா 2025 நிகழ்வில் அதை விளம்பரப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.
- அமிர்தசரி குல்சா சுமார் ஆறு அங்குல விட்டம் கொண்டது மற்றும் அதன் மாவு, உள் திணிப்பு, சமையல் முறை, பரிமாறும் பாணி மற்றும் இரண்டு முறை புளிக்க வைக்கப் பட்டதால் உருவான நறுமணத்திற்குப் பெயர் பெற்றது.
- ஒரு புராணக் கதையானது அதன் உருவாக்கத்தை பேரரசர் ஷாஜகானின் அரச சமையலறையுடன் இணைப்பதால் இந்த உணவு முகலாய காலத்தில் தோன்றியதாக நம்பப்படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★